ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2396/03 - 2024 අගෝස්තු මස 05 වැනි සඳුදා - 2024.08.05

2396/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BER/4/5/2/18.
காணி அமைச்சின் இல.: 035/91/LRB/270.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் பேருவளை பிரதேச செயலகப் பிரிவில் இல. 749, கங்காணமகொட கிராம அலுவலர் பிரிவில், கங்காணமகொட கிராமத்தில் மாகல்லேவெல காணியில் அமைந்துள்ள கடஸ்திரல் வரைபடத்தில் இல. 530746 உம் 2024.02.07 ஆந் திகதியுடைய வரைபடத்தின் காணித்துண்டு இல. 01, 02 மற்றும் 03 எனக் காட்டப்பட்டுள்ள 0.0752 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்படும் காணித் துண்டுகளின் விபரங்கள்:

**துண்டு இல. 1 - காணியின் பெயர்: மாகல்லேவெல; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடம் ஒன்றும் இரண்டு கழிவறை குழிகளும் உண்டு; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: நட்புச் சேவை ஒன்றியம்; விஸ்தீரணம்: 27.9 பேர்ச்**

வடக்கு: மஹபதுகே நிமல்சாந்த பிரனான்து உரிமைகோரும் காணி மற்றும் புகையிரத மார்க்கம்; கிழக்கு: புகையிரத மார்க்கம் மற்றும் தொன் தமித் எதிரிசிங்க உரிமைகோரும் காணி; தெற்கு: தொன் தமித் எதிரிசிங்க உரிமைகோரும் காணி, இவ் வரைபடத்தின் காணித்துண்டு இல. 3 உம் 2 உம்; மேற்கு: காணித்துண்டு இல. 2 உம் காலி வீதியும்.

**துண்டு இல. 2 - காணியின் பெயர்: மாகல்லே வெல; விபரம்: பஸ் தரிப்பிடம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டு பிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.2 பேர்ச்**



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வடக்கு: காலி வீதியும் இவ் வரைபடத்தின் காணித்துண்டு இல. 1; கிழக்கு: காணித்துண்டு இல. 1 உம் 2 உம்; தெற்கு: காணித்துண்டு இல. 2 உம் காலி வீதியும்; மேற்கு: காலி வீதி.

**துண்டு இல. 3 - காணியின் பெயர்: மாகல்லே வெல; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடம், தற்காலிக கட்டிடமும் கழிவறையும் உண்டு; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டு பிடிக்க முடியவில்லை, அப்துல் கபூர் அப்துல் முனாஸ் அனுமதியின்றி வசிக்கிறார்; விஸ்தீரணம்: 1.7 பேர்ச்**

வடக்கு: காணித்துண்டு இல. 2 உம் 1 உம்; கிழக்கு: காணித்துண்டு இல. 1 உம் தொன் தமித் எதிரிசிங்க உரிமைகோரும் காணி; தெற்கு: தொன் தமித் எதிரிசிங்க உரிமைகோரும் காணியும் காலி வீதியும்; மேற்கு: காலி வீதியும் காணித்துண்டு இல. 3.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல். யூ. ஜானக பெரேரா,
பிரதேச செயலாளர்
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2024, யூலை 31.

EOG 08 - 0036

---

திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/IMA/LAN/05/03/01
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/10/2012/UDA/ 368.

இமதூவ நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக காணி கையகப்படுத்துவதன் பொருட்டு 2014, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிய 1893/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசுக்கு காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலின் காணிகள் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்.

அ.வ.கா. 4089 இல் துண்டு இலக்கம் 61இற்கு அமைய சரியான காணியின் விஸ்தீரணம் 0.0034 ஹெக்டயார் ஆவதென்றாலும் 2014.12.15 ஆந் திகதியிட்ட இலக்கம் 1893/4 ஆம் இலக்கம் கொண்ட 7 ஆம் பிரிவு வர்த்தமானப் பத்திரிகையில் காணியின் விஸ்தீரணம் 0.0031 ஹெக்டயாராக குறிப்பிட்டுள்ளது. அந்த காணியின் விஸ்தீரணம் 0.0034 ஹெக்டயாராக திருத்தப்பட வேண்டும்.

எஸ். ஏ. எம். நஸ்லி,
பிரதேச செயலாளர்
இமதூவ.

பிரதேச செயலகம்,
இமதூவ,
2024, யூலை 29.

EOG 08 - 0037

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.